பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஐப்பசி 16 (1—11—68) வெள்ளி ★ வெளியூர்: ஐப்பசி 17 (2—11—68) சனி [இதழ்: 113

சிறைக் கைதிகளின் தியாகம்!

ஜோத்பூர், நவ. 1—

மேற்கு இராஜஸ்தானில் பஞ்சத்தால பாதிக்கப்பட்டவர்சட்கு உதவி செய்வதற்காக இங்குள்ள மத்திய சிறையில் உள்ள 700 கைதிகள், சென்ற வாரம் காலைச் சிற்றுண்டியைத் 'தியாகம்' செய்தனர்.

இதனல் 300 கிலோ உணவு தானியம் மிச்சமாயிற்று; கைதிகளின் காணிக்கையாக அது மாவட்டக் கலெக்டரிடம் கொடுக்கப்பட்டது.

சென்னை மாநகராட்சியின் மாண்பு

வரலாற்றில் சிறப்புபெறும் இரண்டு பணிகள்

அமைச்சர் முத்துசாமி பெருமிதம்

கட்சிக் கண்ணேட்டமின்றிக் கடமையாற்ற வற்புறுத்தல்

சென்னை, நவ. 1—

"மாநகராட்சியில் மேயராக வருகிறவர்கள் கட்சிக்கு அப்பாற்பட்டவர்களாகச் செயல்படவேண்டும். இப்போதைய மேயர் இவ்வழியில் வெற்றிபெற்றுள்ளார்.

"பொதுவாகவே உள்ளாட்சி அமைப்புக்களில் கட்சி அரசியல் கூடாது என்று நம்மில் பலர் தனிப்பட்ட முறையில் பேசும்போது ஒப்புகிறேம். ஆனல் நடைமுறைப்படுத்தும்போது மவுனம் சாதித்துவிடுகிறேம்.

"இது குறித்து அரசியல் கட்சிகளிடையே கருத்துப் பரிமாற்றம் அவசியம். ஆனல் அதுவரை உள்ளாட்சி அமைப்புக்களுக்கு எவர் எந்தக் கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருந்தாலும் மக்கள் நலனுக்காக உழைப்பதில் கட்சிகளை மறந்து பாடுபடுவோமென்கிற மனப்பக்குவம் பெறவேண்டும்"

என்று, உள்ளாட்சித் துறையமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள் நேற்று நடைபெற்ற சென்னை மாநகராட்சி ஆண்டு விழாவுக்குத் தலைமைவகித்து உரையாற்றுகையில் வற்புறுத்தினர்.

மாநகராட்சி மன்றத்தின் 281-ம் ஆண்டு விழா நேரு விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. மாநில ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் விழா வைத் துவக்கிவைத்துப் பேசினர்.

அமைச்சர் முத்துசாமி தமது தலைமையுரையில் மேலும் கூறியதாவது:—

"தமிழர்கள் நீண்ட நெடுங்காலமாகவே மூவேந்தர் காலந் தொட்டே தங்களுக்குள் கிராமக் குடியாட்சி முறையைக் குடவோலை முறை மூலம் நல்ல முறையில் நடத்தி வந்திருக்கிருர்கள் என்பதையும் இதில் தமிழர்கள் வேறு பலருக்கும் வழிகாட்டியாக இருந்திருக்கிருர்களென்பதையும் வரலாறு எடுத்துக் காட்டுகிறது.

இடைக்காலத்தில் அரசியல், பொருளாதார நிலை சீரழிந்து இருந்தது.

அதற்குப் பிறகு மறுமலர்ச்சி தோன்றிய காலத்தில் கிராமக் குடியாட்சி முறையின் மூலமே மக்களது நலத்தை உயர்த்த இயலும் என்பதை நாம் உணர்ந்திருக்கிறேம்.

கிராமக் குடியாட்சி முறையின் உடல் குன்றியபோதிலும், உயிர் மங்காது இருந்திருக்கிறது.

ஆங்கிலேயர் காலத்தில் ஏற்பட்ட அமைப்பே இம்மாநகராட்சி என்ற போதிலும், கடந்த 280 ஆண்டுகளாக இது வெற்றி நடைபோட்டு வந்துள்ளது என்பதும், நாட்டின் ஏனைய மாநகராட்சிகளுக்கெல்லாம் பல வகையில் வழிகாட்டியாகவும் இருந்து வந்துள்ளது என்பதும், நாம் அறிந்ததே.

நாட்டின் அரசியலில் தலைசிறந்து விளங்கிய முதுபெருந் தலைவர்கள் பலருக்கும் பயிற்சிக்கூடமாய் இது இருந்துள்ளது.

மக்களுக்கு இம்மாநகராட்சி ஆற்றியுள்ள நற்பணிகளுக்கு நன்றி செலுத்திப் பாராட்ட நாமெல்லாம் கடமைப்பட்டவர்களாக இருக்கிறேம்.

இப்போதைய மேயர், துணை மேயர் ஆகியோர் இன்றேடு பதவி விலகுகிருர்கள். நாளை முதல் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகரமன்ற உறுப்பினர்கள் பதவி ஏற்கிருர்கள்.

கடந்த ஓராண்டு, இம்மாநகராட்சியின் வரலாற்றில் மிக முக்கியமானதாகும்.

உலகத் தமிழ் மாநாடு இந்தக் காலத்தில் நடந்து, இம்மாநகராட்சியின் பணிகளை உலகத்தவர் அறிந்தனர்.

நீண்ட காலமாக நிறைவேறுதிருந்த காவிரி நீர்த் திட்டத்துக்கு ஒப்புதல் கிடைத்தது.

கூவம் ஆறு சீர்திருத்த ரூபாய் மூன்று கோடி செலவிடத் தீர்மானிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல மாநகராட்சித் தேர்தல் மிகச் சீரும் சிறப்புமாக நடந்தேறியுள்ளது.

நான் பார்த்தவரை சென்னை எழிலும் வனப்பும் மிக்க நகராகவே இருந்து வருகின்றது. வேறுபல மாநகராட்சிகளுடன் ஒப்பிடும்போது, இங்கு மக்களுக்குச் செய்து அளிக்கப்பட்டுள்ள வசதிகளுக்காக நாம் மாநகராட்சியினரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேம்.

காந்தி நூற்றுண்டு விழா கொண்டாடுகின்ற இந்த ஆண்டிலாவது, 'கையினுல் மலம் அள்ளும் கொடுமை ஒழிக்கப்பட்டது' என்ற நிலை உருவாகிடவும், 'குடிசை வாழ் மக்களுக்கெல்லாம் நல்ல குடிநீர் கிடைக்கச் செய்தோம்' என்ற நிலை உருவாகிடவும் நாம் பாடுபடுவோம்!'

கொசுக்கள் ஒழிய வேண்டுமென்பதும், பாதைகள் செப்பனிடப்பட்டுச் சீர்பட வேண்டுமென்பதும், மக்களுக்குப் போதுமான குடிநீர் கிடைக்க வேண்டுமென்பதும் தேவைதான். இதில் கருத்து வேறுபாட்டுக்கே இடமில்லை—ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய உண்மைகளே.

ஆனல், இவைகளெல்லாம் ஒரே நாளில் தோன்றி மறைந்து விடக்கூடியவைகளும் அல்ல. இந்த வேலைகளெல்லாம் ஒரே நாளில் செய்து முடிக்கக்கூடியவைகளுமல்ல என்பது ஆராய்ந்து பார்த்தால் தெரியும்.

கொசுக்கள் 1967 மார்ச் 6-ஆம் நாள் திடீரென்று தோன்றியவையா? 1947-லும் அவை இருந்தன. ஏன், அதற்கு முன்பும் இருந்தன. பல பெரியவர்கள் இந்த மாநகராட்சிக்குள் வந்து இந்தப் பணிகளையெல்லாம் கவனித்துச் சென்றிருக்கிருர்கள். டி. டி. கிருஷ்ணமாச்சாரிகூட சென்னை மாநகருக்கென்று மாநகரமைப்புத் திட்டமொன்றைத் தயாரித்தார். என்ன

(4-ம் பக்கம் பார்க்க)

சேலம் உருக்காலை

தமிழக அரசின் முயற்சி

அமைச்சர் செ. மாதவன் விளக்கம்

சென்னை, அக். 31—

"இன்னேர் உருக்காலை நமக்கு அவசியந்தான என்பதைப் பற்றி மத்திய அரசின் கருத்து என்னவாக இருந்தாலும், நான்காவது திட்டத்தில் சேலம் உருக்கு ஆலையையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்தும்.

"சேலம் உருக்காலை மற்ற ஆலைகளைப் போன்றதல்ல; எனவே, நான்காவது திட்டத்திலேயே சிறிய அளவில் இதைத் தொடங்குவதற்குத் தமிழக அரசு முனைந்து செயல்படும்"

என்று சட்டத்துறை அமைச்சர் செ. மாதவன், செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"சேலம் இரும்புத் தொழிற்சாலையைத் தமிழக அரசே ஏற்று நடத்துவதற்காக அனுமதி கேட்டுப் போட்ட மனுவுக்கு மத்திய அரசு இன்னும் பதில் தரவில்லை.

மத்திய அரசின் இரும்புத் துறை அமைச்சர் சேத்தி பேசும்போது, 'ஐந்தாவது இரும்புத் தொழிற்சாலை வராது' என்பதற்கு என்ன காரணம் என்று கூறவில்லை. பணம் இல்லையா — வெளிநாட்டுச் செலாவணி கிடைக்கவில்லையா — அல்லது இரும்பு உற்பத்தி அளவுக்கு அதிகமாகிவிட்டதா — என்று எந்தக் காரணத்தையும் கூறவில்லை; அதையும் கவனிக்க வேண்டியிருக்கிறது."

உதவியை பொறுத்தே தமிழகத்தின் திட்டம்!

அமைச்சர் மாதவன் மேலும் கூறியதாவது:—

"தி. மு. கழக அரசாங்கத்திடம் திட்டம் எதுவும் கிடையாது என்று காங்கிரசுத் தலைவர்கள் கூறிவருகிருர்கள். தி. மு. கழக அரசு ரூ. 643 கோடி செலவில் திட்டம் ஒன்றைத் தயாரித்திருக்கிறது; இதற்கு மத்திய அரசு எந்த அளவு நிதி உதவி கொடுக்கப்போகிறது என்பதை, காங்கிரசுத் தலைவர்களே டெல்லியிடம் வற்புறுத்திக் கொடுக்கச் சொல்லட்டுமே!

மத்திய அரசு உதவியைப் பொறுத்துத்தான் தி.மு.க. அரசு தயாரித்துள்ள ஐந்தாண்டுத் திட்டத்தின் வடிவம் அமையும்.

ஐந்தாண்டுத் திட்டம் பற்றி முதலமைச்சர் அண்ணு சென்னை திரும்பிய பிறகு அமைச்சரவை கூட்டத்தில் கலந்து பேசி முடிவு எடுக்கப்படும்."

'என்னைக் கவர்ந்தது தமிழகம்'

சென்னையில் அமெரிக்கத் தூதுவர் பெருமிதம்!

அமைச்சர்களைச் சந்தித்து விளக்கங்கள் கேட்டார்

சென்னை, நவ. 1—

"தமிழ்நாட்டில் பல்வேறு துறைகளில் ஏற்பட்டுவரும் முன்னேற்றம், என்னை மிகவும் கவர்ந்திருக்கிறது"

என்று, சென்னைக்கு வருகை தந்துள்ள இந்தியாவின் அமெரிக்கத் தூதுவர் செஸ்டர் பவுல்ஸ், பெருமிதமுடன் கூறினர்.

தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் அவர், அமைச்சர்கள் மு. கருணநிதி, கே. ஏ. மதியழகன் ஆகியோரைச் சந்தித்து, சுமார் 45 நிமிட நேரம், தமிழகத்தில் விவசாயத்திற்கு அதிக நிலங்களைப் பயன்படுத்துவது பற்றியும், நில உச்சவரம்புச் சட்டம் குறித்தும், தமிழ்நாட்டின் பொருளாதார நிலை பற்றியும் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

இந்தச் சந்திப்பின்போது, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் சி. ஏ. இராமகிருட்டினன், சென்னையிலுள்ள அமெரிக்கத் தூதர் ஆகியோரும் உடனிருந்தனர்.

பேச்சுவார்த்தை முடிந்தபின், செய்தியாளர்களிடம், அமைச்சர் மு. கருணநிதி தெரிவித்ததாவது:-

"தமிழக அரசு மேற்கொண்டுள்ள உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டங்கள் பற்றியும், தண்ணீரைச் சேதமின்றி விவசாயத்திற்குப் பயன்படுத்துவது பற்றியும் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

"இதுவரையில் 'ஏ. டி. டி.-27' என்ற நெல் ஒரு போகம்தான் விதைக்கப்பட்டது; இந்த ஆண்டில் இரண்டு போகமும் பயிரிட்டு அதிக நெல் அளவு உற்பத்தி செய்யத் தமிழக அரசு மேற்கொண்டுள்ள முயற்சியைக் கண்டு அவர் வியப்படைந்தார்.

"அன்றியும், மாநகராட்சித் தேர்தல் நிலவரம் குறித்தும் அவர் கேட்டுத் தெரிந்து கொண்டார்."

உடன்பாட்டை மீறுவோர் மீது அரசு நடவடிக்கை

தொடர்ந்து அறுவடை நடக்க உதவி

தஞ்சையில் அமைச்சர் நெடுஞ்செழியன் அறிவிப்பு

திருச்சி, அக். 31—

"அறுவடைக் கூலி சம்பந்தமாகச் சென்ற ஆண்டு மன்னர்குடியில் உழவர்களுக்கும் — நிலக்கிழார்களுக்குமிடையே ஏற்பட்ட உடன்பாடு தொடர்ந்து செயல்படும்"

என்று தொழிலமைச்சர் இரா. நெடுஞ்செழியன், தஞ்சையில் கூறியுள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இந்த ஒப்பந்தத்தை மீறினல், அது, சட்டம் — ஒழுங்குப் பிரச்சினையாகக் கருதி, நடவடிக்கை எடுக்கப்படும்.

'அறுவடை தொடர்ந்து நடைபெற உரிய உதவிகள் செய்யப்படும்."

பொது நிகழ்ச்சிகளில் மதச் சடங்குகள் ஏன்?

மதச் சார்பற்ற தன்மையைத் திரித்துக் கூற முயலாதீர்!

பம்பாய் உயர் நீதிமன்ற நீதிபதியின் கண்டனமும் கருத்தும்

விஜயவாடா, அக். 31—

"மதச் சார்பற்ற கொள்கையை நமது நாடு ஏற்றுக் கொண்டிருக்கிறது; இந்திய அரசியல் சட்டப்படி இந்தக் கொள்கையை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்; இருந்தபோதிலும் நமது சமூகம் இன்னும் மதச் சார்பற்ற தன்மைக்கு எட்டாத தொலைவிலேயே இருந்துவருகிறது!

"மதச் சார்பற்ற தன்மை நடைமுறையில் வரவேண்டுமானால் பல்வேறு சமயத்தவர்களும் இணைந்த மனிதாபிமான சங்கங்கள் பல நாட்டில் தோற்றுவிக்கப்பட வேண்டும்; இந்த நாட்டுக் குடிமகனை அவனது தனித் தன்மைகளைக் கொண்டுதான் மதிப்பீடு செய்ய வேண்டுமேயொழிய அவனது சாதியையோ, மதத்தையோ அடிப்படையாகக் கொண்டு அவனை எடை போடக்கூடாது என்ற நிலைமை உருவானால்தான் மதச் சார்பற்ற தன்மை என்பது கொள்கையளவோடு நில்லாமல் நடைமுறைக்கும் வரும்"

இவ்வாறு, இங்கு நடைபெற்ற ஆந்திர மாநில மதச் சார்பற்றோர் மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில், பம்பாய் உயர் நீதிமன்ற நீதிபதி தார்குண்டே கருத்தறிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"நமது நாடு மதச் சார்பற்ற நாடு; எனவே, இங்கு நடைபெறும் அரசாங்க விழாக்களில் ஒரு குறிப்பிட்ட மதத்துக்குரிய சடங்குகளையும் வழிபாட்டு முறைகளையும் கடைபிடிக்கக் கூடாது.

"நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவான அரசாங்கச் சார்புள்ள பொது நிகழ்ச்சிகளில் ஓமம் வளர்ப்பதும், பிள்ளையார் பூசை செய்வதும் தவறாகும்; நமது மதச் சார்பற்ற தன்மைக்கு அது முற்றிலும் மாறுபாடானதாகும்."

'மதச் சார்பற்ற தன்மை' என்ற கொள்கையை, 'சாதிபேதமற்ற தன்மை' என்று திரித்துக் கூறச் சில தனிப்பட்ட அரசியல் தலைவர்களும், அரசியல் கட்சிகளும், அரசாங்கமும் முயன்று வருவதைக் கண்டித்து மாநாட்டில் தீர்மானம் நிறைவேறியது.

பொது நிகழ்ச்சிகளில் மதச் சடங்குகளும் பூசைகளும் நடத்துவதைத் தடை செய்யக் கோரி மற்றொரு தீர்மானம் நிறைவேறியது.

இந்து அறநிலையங்களுக்கு மாநில அரசுகள் தனி அமைச்சு வைத்திருப்பதை அகற்ற வேண்டும்; மதச் சார்பு உள்ள அமைப்புக்களுக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கக் கூடாது என்றும் மாநாடு யோசனை தெரிவித்தது.

அனுமதி பெற்றே வாங்க வேண்டும்

நகராட்சிகளுக்குத் தமிழக அரசு உத்தரவு

சிவகங்கை, நவ. 1—

"அரசின் அனுமதியின்றி நகராட்சிகள், நிலம் வாங்கக் கூடாது" எனத் தமிழக அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

நகராட்சிகள் இதுவரையில், தங்களுக்கு வேண்டிய கட்டிடங்கள், நிலம் ஆகியவற்றை வாங்கிக் கொண்ட பிறகு, அரசுக்குத் தகவல் தெரிவித்து வந்தன.

ஆனால் இனிமேல், நகராட்சிகள், தங்களுக்கு வேண்டிய கட்டிடங்கள் போன்ற சொத்துக்களை வாங்க வேண்டுமானால், அரசின் அனுமதி பெறாமல் வாங்க முடியாது; அதாவது அரசின் முன்னனுமதி பெற்றுத்தான் அவைகளை வாங்க வேண்டும்.

இதற்கான உத்தரவை, தமிழக அரசு நகராட்சிகளுக்கு அனுப்பியிருக்கிறது.

எகிப்துக்கு இஸ்ரேல் எச்சரிக்கை

கெய்ரோ, அக். 31—

"சூயஸ் கால்வாய்ப் போர் நிறுத்த எல்லையை மீறினால், இஸ்ரேல் படைகள், எகிப்தின் இராணுவ இலக்குகளைக் கடுமையாகத் தாக்கும்"

என்று இஸ்ரேல் பாதுகாப்புத் துறை அமைச்சர், எகிப்துக்குக் கடுமையாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த எச்சரிக்கைக்குப் பிறகு, தயார் நிலையில் இருக்குமாறு எகிப்து படைகள் அனைத்துக்கும் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

இராணுவத்தினரின் விடுமுறைகள் முழுவதும் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன.

காந்தியின் கொள்கைக்கு மாறாகக் காங்கிரசார்!

கானல்நீரை நோக்கி நாடு செல்கிறது

காங்கிரசுப் பிரமுகரே கண்டிக்கிறார்

குடந்தை, அக். 30—

காந்தியின் கொள்கைகளைச் செயல்படுத்தக் காங்கிரசுக் கட்சி தவறிவிட்டது என்று குற்றஞ்சாட்டியுள்ளார், காங்கிரசுப் பிரமுகரும் தொழிலதிபருமான பொள்ளாச்சி என். மகாலிங்கம்.

இங்கு நடைபெற்ற ஒரு விழாவில் பேசுகையில் மேலும் அவர் கூறியதாவது:—

"அதிகபட்ச சம்பளம் குறைந்த பட்ச சம்பளத்தைவிட 15 மடங்கிற்கு மேல் போகக்கூடாது என்று காந்தி வற்புறுத்தியபடியா இப்போது நடக்கிறது? அவர் கொள்கையை எந்தக் காங்கிரசு ஆட்சி செயல்படுத்த முன்வந்தது?

இன்றைய நிலைமை மிகவும் பரிதாபத்திற்குரியதாக இருக்கிறது; ஆறாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் நாம் வெளிநாடுகளுக்குக் கடன் கொடுக்க வேண்டியிருக்கிறது; மேற்கொண்டு வெளிநாட்டுக் கடன் கிடைக்காத நிலைமை தோன்றிவிட்டது.

நாடும், நாட்டின் ஆட்சியும் இருபதாண்டுக் காலமாகக் கானல்நீரை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றன! இந்த் நிலைமை மாறி நமது இலட்சியத்தை இறுதியாக முடிவு செய்யும் காலம் வந்து விட்டது!"

காங்கிரசாரின் அற்ப மகிழ்ச்சி!

'ஆட்சியைப் பிடித்துவிடலாம் எனக் கனவு காணாதீர்' --- அமைச்சர் மாதவன் அறைகூவல்

பட்டுக்கோட்டை, அக். 30—

"சென்னை மாநகராட்சித் தேர்தலில் அதிக இடங்களில் வெற்றி பெற்றுவிட்டதாகக் காங்கிரசார் மகிழ்ச்சியடைகிறார்கள்; அது பற்றி நமக்குக் கவலை இல்லை.

"ஆனால், இனி காங்கிரசு ஒரு போதும் ஆட்சிக்கு வரப் போவதில்லை -- நாம் திறமையாக ஆட்சி நடத்துகிறோம்!

"நம்மிடமிருந்து பிரிந்த சிலரை வைத்துக் குட்டையைக் குழப்பி மீன் பிடிக்கக் காங்கிரசார் நினைக்கிறார்கள் -- அது பலிக்காது"

என்று அமைச்சர் செ. மாதவன் பட்டுக்கோட்டையில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"சென்னை மாநகராட்சியில், 'ஊழல், ஊழல்' என்கிறார்கள்; ஊழல் என்றால், அன்று முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம், மாநகராட்சியைக் கலைத்துவிட்டிருப்பாரே!

இந்திப் போராட்டத்தில் இறந்தவர்களுக்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றியதற்காக 2 நகரசபைகளைக் கலைத்தவர் அல்லவா அவர்!

"கூட்டு சேர்ந்ததைக் குறை கூறுகிறார்கள். காங்கிரசை ஒழித்துக் கட்டுவது எங்கள் பொதுவான நோக்கம்; அதனால் கூட்டணி அமைத்தோம்; மற்றபடி எங்கள் தனிப்பட்ட கொள்கை எதையும் விட்டுவிடவில்லை.

"தி. மு. க. ஆட்சிமீது என்ன குறைகூறமுடியும் இவர்களால்? காங்கிரசுக் கட்சி ஆளும் மாநிலங்களோடு தமிழ்நாட்டையும் ஒப்பிட்டுப் பார்க்கட்டும்!

"1969-ல் ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் நிறைவேற்ற ரூ. 643 கோடிக்குத் திட்டங்கள் தயாரித்துக் கொடுத்திருக்கிறோம். ஆனால் அதை நிறைவேற்றும் அதிகாரம் டெல்லியிடம் அல்லவா இருக்கிறது?"

இந்தியாவுக்கு எறி குண்டுகள்

அனுப்ப டேனிஷ் கம்பெனிக்குத்தடை

கோபன்ஹேகன், அக். 31—

சுமார் 1 இலட்சம் எறி குண்டுகளைத் தயாரித்து அனுப்புமாறு இந்திய அரசு, ஒரு டேனிஷ் நிறுவனத்திற்கு ஆர்டர் கொடுத்திருந்தது; ஆனால், இந்த எறி குண்டுகளை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாது என்று டேனிஷ் அரசு தடை செய்து விட்டது.

'அனைத்து நாட்டுத் தகராறுகள் ஏற்பட்டுள்ள அல்லது தகராறு

(3-ம் பக்கம் பார்க்க)

நீதிபதிகள்மீது கூறப்படும் புகார்

கண்ணியமானதாக இருக்க வேண்டும்

தலைமை நீதிபதி இதயதுல்லா கருத்து

ஐதராபாத், அக். 31—

"பிறர் குறை கூறுவதை நீதிபதியின் சரியான கண்ணோட்டத்துடன் அணுகவேண்டும்; அப்படிப் பேசுகிறார்களே என்று சலித்துக்கொள்ளலாகாது. நீதிபதிகளைப்பற்றி எப்போதுமே ஏதாவது குறைபாடு சொல்லத்தான் செய்வார்கள்; நேர்மையுடன் கூறப்படும் புகார்களை நீதிபதிகள் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது.

"நீதிபதிகளைக் குறை கூறலாம்; ஆனால், அது கண்ணியமான முறையில் இருக்கவேண்டும்; நீதிபதிக்கு நோக்கம் கற்பிக்கக்கூடாது.

"நீதிபதிகளும், தாம் நடந்துகொள்ளும் முறையிலிருந்து மரியாதையைச் சம்பாதித்துக்கொள்ள வேண்டும்; 'நீதிபதி நேர்மையாக நடந்துகொள்ளுகிறார்' என்ற திருப்தி மக்களுக்கு ஏற்பட்டால், நிச்சயமாக அவருக்கு மரியாதை கிடைக்கும்."

இவ்வாறு, இந்தியாவின் தலைமை நீதிமன்றத் தலைமை நீதிபதி இதயத்துல்லா சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

"நீதிமன்றத்தை அவமதித்ததற்காக யாரையும் தண்டிப்பதில், நீதிபதிகள் முன்னெச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

அதே சமயத்தில் யோதிய காரணமில்லாமல் நீதிபதிகளுக்கு நோக்கம் கற்பித்து, நீதியின் போக்கைத் தடை செய்ய முயலுபவர்கள் அதன் பலனை அனுபவிக்கத்தான் வேண்டியிருக்கும்.

ஒரு நீதிபதிக்கு நோக்கம் கற்பிக்கப்பட்டால் அவர் என்ன செய்ய முடியும்? அப்படிக் கூறுபவர்மீது நீதிமன்றத்தில் வழக்குப் போட முடியுமா? நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை ஒன்றுதான் அவருடைய பாதுகாப்பாகும்.

"நீதிமன்ற அவமதிப்பு என்றால் என்ன என்று விளக்கமாக விளக்கவேண்டும்" என்று சிலர் கேட்கிறார்கள்; பலவந்தமாக ஒருவரைக் கீழ்ப்படிய வைப்பதற்கான ஒரு ஆயுதம் அல்ல அது; நீதிமன்றங்களின் கண்ணியத்தைக் காப்பாற்றுவதற்கான ஓர் ஆயுதமேயாகும்; அது ஒன்றைத் தவிர அதற்கு வேறு நோக்கமே இல்லை.

நீதிபதிகளுக்கு இழுக்குக் கற்பிக்க அல்லது நீதி நிர்வாகத்தைச் சகதியில் தள்ளச் சிலர் முயற்சி செய்யும்போதுதான் இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது.

நீதிமன்றத்தின் முன்பு கொண்டு வரப்படுபவர் ஒவ்வொருவரையுமே தண்டிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. ஒரு நீதிபதி, நீதிமன்ற அவமதிப்பு மனுவை விசாரிக்கும்போது, தாமே குற்றவாளியாகவும், நீதிபதியாகவும் இருக்க வேண்டியிருக்கிறது; எனவே, அவர் நிதானத்துடன் தான் இருப்பார்."

மத்திய அரசின் மொழிக் கொள்கை தோல்வி

'சூழ்நிலை மாறும் வரையில் ஆங்கிலமே நீடிக்க வேண்டும்'

மதுரை நகர மக்கள் கல்விக் கழகக் கூட்டத்தில் வற்புறுத்தல்

மதுரை, அக். 31—

"மத்திய அரசின் மொழிக் கொள்கை தோற்றுவிட்டது. அது, நாட்டில் மனக்கசப்பு – வெறுப்பு–வெறி பிளவு மனப்பான்மை ஆகியவற்றைத்தான் தோற்றுவித்துள்ளது.

"மிகவும் ஆபத்தான இந்தச் சூழ்நிலை மாறிய பின்புதான புதிய மொழிக்கொள்கையை உருவாக்க முடியும்.

"அந்தச் சுமூகமான நிலை ஏற்படும்வரை மத்திய அரசு அலுவலகங்களில் ஆங்கிலம் தொடர்பு மொழியாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

"மாநில மொழிகள் வளர்ச்சியுற்று தங்களுக்கு உரித்தான இடத்தை அடைய மத்திய அரசாங்கம் எந்தவிதப் பாரபட்சமுமின்றி எல்லா மொழிகளின் வளர்ச்சிக்கும் சமமாகப் பண உதவிபுரிய வேண்டும்"

இவ்வாறு, திரு. தர்மராஜ் சந்தோஷம் எம்.எல்.சி. தலைமையில் நடைபெற்ற மதுரை நகர மக்கள் கல்விக் கழகக் கூட்டத்தில், மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

பேராசிரியர்

சிவமுத்துக்குச் சிலை

சென்னை மாணவர் மன்ற முயற்சி

சென்னை, அக். 28—

பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் நினைவு நாள் விழா 26—10—68-ல் சென்னை மாணவர் மன்ற நிலையத்தில் நடைபெற்றது.

மேஜர் டாக்டர் எஸ். கோவிந்தராசன் விழாவிற்குத் தலைமை தாங்கினர்.

கவிஞர் தணிகை உலகநாதர், பேராசிரியர் தம் அரும் பெரும் பணிகளை விளக்கி வரவேற்புரை ஆற்றினர்.

தலைமை உரையாற்றிய மேஜர் கோவிந்தராசன் குறிப்பிட்டதாவது :—

"மாணவரிடையேயும் மக்களிடையேயும் தமிழார்வம் மிளிரச் செய்துவந்தவர் மயிலை சிவமுத்து மாணவர் ஆசிரியர் முன்னேற அரும் பெரும் பணி புரிந்தார். தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்தார்."

திரு. காஞ்சி. மணிமொழியார் அவர்கள் தொடர்ந்து சிறப்புரையாற்றினர்.

விழாவின் வெற்றி கருதி வந்திருந்த வாழ்த்துச் செய்திகளைப் புலவர் கோ. வில்வபதி அவர்கள் படித்தார்.

தொடர்ந்து பேசிய புலவர் கோ. வில்வபதி அவர்கள் மறைந்த பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கட்குச் சிலை வைக்க உதவி புரியுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

பின்னர் டாக்டர் மு வரதராசனர் அவர்கள் மயிலை சிவமுத்து நினைவு மலரினை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினர்.

"மன்றத்தினமூலம் தம் தமிழ்த் தொண்டு தமிழகம் முழுவதும் பரவச் செய்தார். தம் உழைப்பை ஈந்து ஊதியம் (புகழ்) பெற்றார். மன்றத்தின் வாயிலாகத் தமிழ் மக்கள் மேன்மேலும் தமிழார்வம் பெற வேண்டும். இவ்வகையில் பணிபுரிந்த பெரியார் மயிலை சிவமுத்து அவர்கட்கு இந்த மலர் ஒரு சிறு காணிக்கை" என்று குறிப்பிட்டு டாக்டர் மு. வரதராசனர் கூறினர்.

டாக்டர் மேஜர் கோவிந்தராசன் அவர்கள் மயிலை சிவமுத்து சிலை அமைக்க முதல் நன்கொடையாக ரூ. 100 வழங்கினர்.

பேராசிரியர் அன்பு கணபதி நன்றி கூறினர்.

நவீன தொழிலியல் பல்கலைக் கழகம்

பல நாட்டவரும் பயிலுவதற்கு வசதி

பிரிட்டனிலேயே மிகவும் முன்னேறியுள்ள சாதனங்களுடன் கூடிய நவீன தொழிலியல் கூடம் ஒன்று இலண்டனுக்கு மேற்கே 30 மைல் தொலைவில் அமைக்கப் பட்டுள்ளது. இந்தியா உள்ளிட்ட சுமார் 50 நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் இதனல் பயனடைய இருக்கிறார்கள்.

'தொழிலியல் பல்கலைக் கழக'மாக இந்தப் புதிய கூடம் இருந்தாலும், அதுவே ஒரு தனி நகர் போன்ற அமைப்புடன் உள்ளது

இங்குள்ள எவரும், தம்முடைய எந்தத் தேவைக்கும் வேறு இடம் செல்ல வேண்டியதில்லை.

கடை, பாங்கி, ஓட்டல் போன்றவை இந்தப் பல்கலைக் கழகமாக வளர்ந்துள்ளது. 5,000 மாணவர்கள் இங்கு இனிப் பயிற்சி பெறலாம்.

விரைவுபடுத்தும் வேலையின் முதல் கட்டம் முடிவடைந்ததும், 1,400 மாணவர்கள் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இன்னும் அதிக மாணவர்களின் நலனுக்காக மேலும் விரிவுபடுத்தப் படவிருக்கிறது.

திருமணம் ஆன மாணவர்கள் தங்கிப் படிக்கவும் இங்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மாநிலங்களில் டில்லிப் போலீசுக்கு அதிகாரம்!

மாற்றுக் கட்சி ஆட்சியில் ஆதிக்கம் செலுத்தப் புதிய ஏற்பாடு

மத்திய ரிசர்வு போலீசுப்படையை பெடரல் போலீசுப் படையாக்கச் சட்டம்!

புதுடில்லி, அக். 31—

மத்திய ரிசர்வு போலீசுப் படையை மத்திய பெடரல் போலீசுப் படையாக மாற்றுவதற்கு மத்திய உள்துறை அமைச்சு, மசோதா ஒன்றைத் தயாரித்துவருகிறது.

மாநிலங்களில் உள்ள காவல் துறையினர் மத்திய அரசுச் சட்டம் சம்பந்தப்பட்ட ஏதேனும் குற்றங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று கருதக்கூடிய நிலைமை ஏற்படும்போது இந்த மத்திய பெடரல் போலீசு செயல்படும் என்று கூறப்படுகிறது.

மத்திய உள்துறை அமைச்சு, இப்படிப்பட்ட நடவடிக்கைக்கு மத்தியப் போலீசுப் படை பயன்படும் வகையிலேயே மேற்கூறிய மசோதாவைக் கொண்டுவரப்போவதாகத் தெரிகிறது.

தற்போது மத்திய அரசு அலுவல்கள் தொடர்பிலும், மத்திய அரசு நிறுவனங்கள் தொடர்பிலும் பாதுகாப்புச் சம்பந்தமான குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோரைக் கைது செய்யும் அதிகாரம் மட்டுமே மத்திய சிறப்புக் காவல் படைக்கு உள்ளது, அவை சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டு நடவடிக்கைகள் மாநிலக் காவல் துறையினரின் அதிகாரத்தில் உள்ளது.

"கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ள மசோதா அரசியல் சட்ட விதி முறைக்கு முரண்பட்டதல்ல" என்று மத்திய சட்ட அமைச்சகம் கருதுகிறது.

"'பொது ஒழுங்கு' என்பது, மாநிலத்தின் சார்பான பட்டியலில் உள்ளதென்றாலும், மத்திய அரசுப் பட்டியலில் இரண்டாவது பதிவின்படி நாட்டின் முப்படை மீதும் மத்திய அரசுக்கு அதிகாரம் உள்ளது போன்றே மற்றுமுள்ள ஆயுதப்படைகள்மீதும் அதற்கு அதிகாரம் உள்ளது; எனவே, மாநிலப் பட்டியலில் உள்ள 'பொது ஒழுங்கு'என்ற வரிசையிலிருந்து மத்திய அரசு அதிகாரத்தில் உள்ள ஆயுதப் படைகள், அப்பாற்பட்ட நிலையில் உள்ளது" என்றும் மத்திய சட்டத்துறை அமைச்சகம் கருதுகிறதாம்.

மத்திய ரிசர்வு போலீசை ஒரு மாநிலத்துக்கு அனுப்பும்போது, அப்படை அங்குள்ள இன்ஸ்பெக்டர்-ஜெனரலுக்குக் கீழ்தான் செயல்படவேண்டும்; ஆனல், கைது செய்யும் உத்தரவை டில்லி பிறப்பிக்கும்போது அந்த உத்தரவுக்கிணங்க ரிசர்வு போலீசு தானகவே செயல்பட வேண்டும்; அப்போது அது, மத்திய அரசின் நேரடி உத்தரவுகளுக்குக் கட்டுப்படுகிறது.

'செப். 19-ம் நாள் மத்திய அரசு ஊழியர்களின் வேலைநிறுத்தத்தில் சம்பந்தப்பட்டவர்கள்மீது கேரள அரசு நடவடிக்கை எடுக்காது' என்று உறுதி செய்யப்பட்டிருப்பதால், மத்திய அரசு இந்த மசோதாவை அவசரமாகக் கொண்டு வருகிறது; ஆனல் இம்மசோதா, நவ. 11-ம் நாள்கூடும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படுமா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை.

இம்மசோதா, நாடாளுமன்றத்தில் வரும்போது எதிர்க்கட்சிகளின் பலத்த எதிர்ப்பையும், கண்டனத்தையும் சமாளிக்க வேண்டியிருக்கும்.

இந்தியாவுக்கு எறி குண்டுகள்

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கள் ஏற்படக்கூடிய இடங்களுக்கு ஆயுதங்களை அனுப்பக் கூடாது' என்பது டேனிஷ் அரசின் கொள்கை; இந்தக் கொள்கைக்கு இணங்கவே இந்தியாவுக்கு எறி குண்டுகளை அனுப்பக் கூடாது என்று டேனிஷ் அரசு தடை செய்துள்ளது.

டென்மார்க்கில் 'வெஜ்ரா' நிறுவனத்திற்கே எறி குண்டுகளை வழங்குமாறு கோரி இந்திய அரசு ஆர்டர் கொடுத்திருந்தது; சென்ற ஆண்டில் இதே நிறுவனத்திற்கு 50,000 எறி குண்டுகள் சடனை செய்ய இந்தியா ஆர்டர் கொடுத்திருந்தது; அந்த சடனையை டேனிஷ் அரசு நிறுத்தவில்லை; விரைவில் அந்த குண்டுகள் இந்தியாவுக்குக் கிடைக்கும்.

சிற்றரசுக்குரிய சிறப்புப் பெறும் இலண்டன் மேயர்

தனிப் போலீசுப் படையும் அவருக்கு உண்டு

பொதுத் தேர்தல்களில் ஆளும் கட்சி, மீண்டும் பெரும்பான்மை பலத்துடன் சட்டமன்றத்துக்குள் நுழைந்தால் முந்திய தலைமையமைச்சரே (அல்லது மாநில முதல்வரே) மீண்டும் அதே பதவியில் வர முடிவது போலவே, பிரிட்டனில் உள்ள மாநகராட்சி மன்றங்களில் மேயர் தேர்தலும் நடைபெறுகிறது.

ஆண்டுதோறும் மேயர் தேர்தல் நடக்கும்; ஆனல், 'இந்த ஆண்டு மேயராக இருப்பவர் அடுத்த முறை அப்பதவிக்குப் போட்டியிடக் கூடாது' என்று கட்டாயம் இல்லை; அவர் விரும்பினல் மீண்டும் நிற்கலாம்; அவரது நல்ல பணியைக் கருதி மீண்டும் அவரே தேர்ந்தெடுக்கப்படலாம்.

பிரிட்டனில் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நகராட்சித் தேர்தல்கள் நடக்கும். இப்படித் தேர்ந்தெடுக்கப்படுவோர், நகராட்சி உறுப்பினர் ஆகிறார்கள்.

இவர்கள் தவிர, அவர்களே நிர்வாக வசதிக்காக மேலும் சில உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வார்கள்; இப்படிச் சேர்க்கப்படுபவர்கள் 'ஆல்டர்மேன்' என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் பொதுமக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் அல்லர்; ஆனல், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் பொறுக்கி எடுக்கப்பட்டவர்கள்; தேர்தல் மூலம் வந்தவர்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகள் -- இவர்களின் பதவிகாலம் ஆறு ஆண்டுகள்.

ஒருவரே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராகவும், 'ஆல்டர்மேன்' ஆகவும் ஒரே நேரத்தில் இருக்க முடியாது.

இந்த இருவகை உறுப்பினர்களும் சேர்ந்து மேயரைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

'நகரின் முதல் குடிமகன்' என்று அழைக்கப்படும் மேயர், ஒரு சிறு நாட்டின் அரசர் போன்ற மதிப்புக்கு உரியவர்.

இலண்டன் மேயரை எடுத்துக் கொண்டால் அரசியாருக்கு அடுத்த இடம் பெறுபவர் இவர் தான்; இவர் பங்கு பெருத நகராட்சி விழாவே இராது.

மேயராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் நகர மாஜிஸ்திரேட்டாக பணியாற்றுவார். உயர் நீதி மன்ற நீதிபதிகள் முன்னிலையில் தான் பதவி உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும்.

நகரின் வீட்டமைப்பு, மேம்பாடு, பொதுச் சுகாதாரம், கல்வி, நீதி ஆகியவை நகராட்சிக் கடமைகளாகும்.

குடிநீர், சாக்கடை, குப்பைகளை அகற்றுதல், மற்றும் இது போன்ற அன்றாட -- இன்றியமையாத வேலைகளைக் கவனிக்க இந்த மாநகராட்சிக்குட்பட்ட பல குழுக்கள் உண்டு.

நகரின் போக்குவரத்துங்கூட மாநகராட்சியின் கடமைதான். இலண்டன் நகர மாநகராட்சிக்குச் சொந்தமாக -- மேயர் கட்டுப்பாட்டில் -- தனிப் போலீசுப் பிரிவிலே இருக்கிறது. மற்றப் போலீசாருக்கும் -- இந்த மாநகராட்சிப் போலீசாருக்கும் வேறுபாடு தெரிய, இவர்களின் ஆடைகளில் சில அடையாளங்கள் உண்டு.

பூம்புகாரில் பத்தினிக் கோட்டம்

அறநிலைக் குழு வேண்டுகோள்

காவிரிப்பூம்பட்டினம், அக். 30—

காவிரிப்பூம்பட்டினத்தில் கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம் அமைப்பதற்கென்று அமைக்கப் பட்டுள்ள அறநிலைக் குழுவினரின் வேண்டுகோள் வருமாறு :—

"செந்தமிழ் நாட்டில், கற்பில் சிறந்த பத்தினித் தெய்வம் கண்ணகிப் பெருமாட்டிக்குக் காவிரிப்பூம்பட்டினத்தில் ஒரு பத்தினிக் கோட்டம் எழுப்பப்பெறுகிறது.

தாசில் பண்ணை திருமதி ஆர். கௌரி அவர்கள் நிலமும், பொருளும் தந்துதவியுள்ளார்கள்.

மேலும், மாமல்லபுரம் சிற்பாசிரியார் திரு. வி. கணபதி ஸ்தபதியாரைக் கொண்டு 'கைவினை முற்றிய படிமம்' ஒன்றும் செய்தளித்துள்ளார்கள்.

"4—11—68-ல் அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் கால்கோள் பணியாற்றுகிறார்கள். சிற்ப இலக்கணங்கள் பொற்புறப் பொருந்தத் திருவுண்ணாழியும், மாடமும், மண்டகமும் எழுப்பி நாளும், திங்களும், நல் விழா நிகழ வழிவகை செய்ய அன்பர்கள் முன்வந்துள்ளனர்.

"பணி பெரிது; பயனும் விழுமியது; எனவே, பத்தினிக்கோட்ட அறநிலைக் குழு ஒன்று அமைக்கப்பெற்றுள்ளது; அக்குழுவே ஆக்கும் பணியையும், காக்கும் பணியையும் மேற்கொண்டு செயலாற்றும்.

"தமிழ்ப் பற்றும், அற உணர்வும், அன்புள்ளமும் உடைய நல்லன்பர்கள் யாவரும் தாராளமாகப் பொருளுதவி தந்து இப் பணி சிறந்தமைந்து வளஞ் சுரக்கச் செய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம்."

நன்கொடை அனுப்ப முகவரி:— கே. எஸ். இராமலிங்கம், தலைவர், பத்தினிக் கோட்ட அறநிலைக் குழு, மேலையூர்—காவிரிப் பூம்பட்டினம், தஞ்சை மாவட்டம்

உணர்வோர் உள்ளம்

ஆவன செய்யப்படுமா?

ஐயா,

தமிழகத்தின் தலைசிறந்த மாவட்டத் தலைநகர்களில் சேலம் மாநகரும் ஒன்றாகும். இங்கு வதியும் மூன்று இலட்சம் மக்களுக்கு வசதியாக நூல் நிலையம் ஒன்றுகூட இல்லாதது பெரும் குறைபாகும்.

தற்போது செயல்பட்டுவரும் மாவட்ட நடுவண் நூலகம், நகரின் ஒதுக்குப்புறத்தில் உள்ளது; இட வசதி, காற்றேட்ட வசதி கிடையாது.

இக்குறைப்பாட்டை நீக்க வேண்டுமானல், மாவட்ட நூலக ஆணைக் குழு உடனடியாகத் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும். மத்திய நூலகம் நகரின் மத்தியில் கட்டப்படல் வேண்டும்.

சேலம்—தருமபுரி மாவட்டங்களுக்குத் தனித்தனி நூலக ஆணைக் குழுக்கள் ஏற்படுத்த வேண்டும். இதுபற்றிச் சம்பந்தப் பட்டவர்கள் இதற்கு ஆவன செய்யவேண்டும்.

ஏ. நடராசன்
தாரமங்கலம்

திருவள்ளுவர் 2000-வது ஆண்டுவிழா

தமிழகப் புலவர் குழு வேண்டுகோள்

தமிழகப் புலவர் குழு அண்மையில் செங்கற்பட்டில் கூடித் திருவள்ளுவர் 2000-ஆவது ஆண்டு விழாவை 1969 தைத் திங்கள் 4-ம் நாள் கொண்டாடும்படி பல நிறுவனங்களையும், பொதுமக்களையும் வேண்டிக் கீழ்வரும் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது :—

1. திருவள்ளுவர் 2000 ஆண்டு விழாவினை 1969 தை 4-ம் நாள் (17—1—69) தமிழகமெங்கும் கொண்டாடவும், இந்திய அரசும் ஐ. நா. கழகமும் கொண்டாடவும் ஆவன செய்யுமாறு தமிழக அரசினை இத்தமிழகப் புலவர் குழு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

2. பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள், அரசின் அலுவலகங்கள், பேரூராட்சி, நகராட்சி, ஊராட்சிமன்றங்கள், ஒன்றியங்கள் ஆகிய அனைத்தையும் வருகின்ற தைத் திங்கள் 4-ஆம் நாள் (17—1—69) திருவள்ளுவர் உருவச் சிலையையோ படத்தையோ வைத்து திருவள்ளுவர் 2000 ஆண்டு விழாவினைக் கொண்டாட வேண்டுமென இப்புலவர் குழு வேண்டிக் கொள்கிறது.

3. ஊர்தோறும் -- தெருத்தோறும் -- வீடுதோறும் மாவிலைத் தோரணம் கட்டித் திருவள்ளுவர் உருவப் படத்தைத் திறந்து வைத்து ஒரு திருக்குறளையாவது மனப்பாடம் செய்து, வள்ளுவர் 2000 ஆண்டு விழாவினைக் கொண்டாடுமாறு இக்குழு, தமிழகத்துப் பெருமக்களை வேண்டுகிறது.

கோத்தகிரியில் சீரணிப் பணி

கோத்தகிரி சீரணியினர், கன்னேரிமூக்கு பள்ளிக்குப் பாதை அமைத்துக் கொடுத்தனர்.

ஆரம்பத்தில் நடந்த துவக்கக் கூட்டத்திற்கு திரு. கே. என். பி. தலைமைவகித்தார்.

நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் பி. அய்யன்னராஜ் பணியைத் துவக்கி வைத்து, சீரணியினர் ஆற்ற வேண்டிய கடமை, ஊர் மக்களின் ஒத்துழைப்பு ஆகியவைகளை வலியுறுத்திப் பேசினர்.

ஊராட்சித் தலைவர் எம். கே. நஞ்சா கவுடர், ஒரசோலை ஊராட்சி உறுப்பினர் ஜே. இராமண்ணா, எஸ். அஜ்ஜர், மற்றும் ஊர் மக்கள் உற்சாகத்துடன் பாதையை செப்பனிட்டுக் கொடுத்தனர்.

தோல்வி கண்ட தோழர்கட்கும் கடமை உண்டு!

பெரும்பான்மை பலம் கூட்டணிக்கு இருக்கிறதென்றாலும் -- மேலும் எட்டு ஆதிதிராவிடத் தோழர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பலம் பெருகிவிடும் என்றாலும் -- சென்னை மேயர் நம்மவர்தான் என்றாலும் -- நீ, உன் வட்டத்தில் வெற்றிக்கான வாய்ப்பை இழந்தது உன்னால் தாங்கிக்கொள்ள முடியாததுதான்!

'புரூடஸ் -- நீயுமா?' என்று கட்டாரிக் குத்தை முதுகிலே தாங்கிக்கொண்டு இரத்த நீர் வீழ்ச்சிபோல் நின்ற ஜூலியஸ் சீசர் வேதனையோடு கேட்டான்! அப்படி, சிலரைப் பார்த்து நீ கேட்க வேண்டியிருந்தது!

'அண்ணன் தலையைக் கொய்து வருபவர்க்கு ஆயிரம் பொன் பரிசு' என அறிவித்தான் குமணன் தம்பி இளங்குமணன்! அவனையே கூட நல்லவனாக்கிவிட்ட தம்பிகள் சிலர், நமது அண்ணனுக்கு இருந்திருக்கிறார்கள் என்பதை, 1960-ஆம் ஆண்டிலும் கண்டோம்! இப்போது இந்த மாநகராட்சித் தேர்தலிலும் கண்டோம்!

அவர்களின் துரோகத்தால் நீ வெற்றிபெற முடியாமல் போய்விட்டது! நீ, தோல்வியால் துவண்டுபோய் மூலையில் உட்கார்ந்துவிடமாட்டாய் என்பதை நானறிவேன்!

காஞ்சி மண்ணில் நமது அண்ணன் தோல்வி கண்டபோது என்ன சொன்னார் 1962-ல்—

"நான் தோற்றதாக எண்ணவில்லை; ஐம்பதுபேர் உருவிலே நான் சட்டமன்றத்துக்குச் செல்வதாகவே கருதுகிறேன்"

இப்படிச் சொன்னவருக்குத் தம்பியப்பா நீ!

எழுச்சி உள்ளம் படைத்தவன் நீ! உன் தோல்விக்காகக் கவலைப்படுவதை மறந்துவிட்டு -- தோல்விக்கான காரணங்களைச் சிந்தித்துப்பார்!

துரோகிகள் செய்த சதியால் சில வாக்கு வித்தியாசத்தில் வெற்றிக்கான வாய்ப்பை இழந்துவிட்டாய்; அது உண்மைதான் என்றாலும் -- ஊரறியும் அந்தக் காரணத்தை என்றாலும் -- 'அந்தத் துரோகத்தையும் கடந்து வெற்றிபெற முடியாமல் போனது ஏன்' என்று ஆர அமரச் சிந்தித்துப் பார்!

"நாம் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டத்திற்குச் சரிவர வேலை செய்யாமல் இருந்துவிட்டோமா? ---

இந்தக் கேள்விக்கான பதிலை, உன் மனச்சாட்சியிடம் கேட்டுக்கோள்!

"உன்னைப் பதவியில் அமர்த்திய கழக அமைப்பில் உள்ளவர்களைப் பகைத்துக் கோண்டாயா? அவர்களை அலட்சியப்படுத்தினாயா? அதனால் அவர்கள் உன்னை அலட்சியப்படுத்திவிட்டார்களா?"

அப்படி அவர்கள் செய்திருந்தால், நீ செய்த குற்றத்திற்கு அவர்கள், 'கழகத்தைத் தண்டிக்க முனைந்தது பெரும் பாதகம்' என்பதை நல்லோர் உணருவர்!

அவர்கள் அந்தப் பாதகர் பட்டியலில் இடம்பெறுவர்; எனினும் -- அந்தப் பட்டியல் பெருகிடும் வண்ணம் நீ நடந்துகொண்டிருந்தால் -- அந்த உன் போக்கும் கழகத்தின் வலிவைக் குறைத்திடும் என்பதை உணர்ந்து, 'நீயே உன் தோல்விக்கு ஒரு காரணமாகிவிட்டாய்' என்பதையும் கணக்கிலெடுத்துச் சிந்தித்துப் பார்!

தோற்றுவிட்டதால், உனக்கும் — நீ எதிர்பார்த்த பதவிக்குமுள்ள தொடர்புதான் அறுந்துவிட்டது!

பதவி என்றால் என்ன? — பணிபுரிய ஒரு வாய்ப்பு! அந்த வாய்ப்பைப் பதவியில் இல்லாமலே கூடப் பயன்படுத்திக்கொள்ளலாம் அன்றோ!

நீ தோற்றுவிட்டாலும், உனக்காக வாக்களித்தவர்கள் உன் வட்டத்தில் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். அவர்களுக்காகவும் -- பொதுவாக உன் வட்டத்தின் மேன்மைக்காகவும் பணியாற்றுவதே உன் கடமையுணர்வுக்குத் தக்க சான்று!

சென்ற முறை தோற்றுவிட்ட தோழர்களைப் பார்த்தாயா? வெற்றி பெற்ற காங்கிரசுக்காரர்கள், கவுன்சிலராக இருந்து பணியாற்றியதைவிடப் பன்மடங்கு பணிகளை அந்த வட்டத்தில் நிறைவேற்றியிருக்கிறார்கள்; அதனால், இந்த முறை, அதிகாரபூர்வமான கவுன்சிலராகிவிட்டார்கள்!

நீ சுழன்று சுழன்று சுறுசுறுப்பாகப் பணியாற்றிக் கொண்டே இரு! பதவிகள் உன்னைத் தேடி வந்து காலடியில் விழும்!

நீ பதவிக்காகக் கழகத்தில் சேர்ந்தவனல்லவே! சிறை செல்ல --- சித்திரவதைகள் அனுபவிக்க --- அடக்குமுறைகளை ஏற்க --- அராஜகத்தைத் தாங்கிட --- உறுதிகொண்ட உள்ளத்தோடு கோடி தூக்கி உழைக்கத்தானே புறப்பட்டாய்!

நீ பட்டபாடுகள் கொஞ்சமா? நீ ஏற்ற கொடுமைகள் குறைவானதா?

காங்கிரசார் ஆண்டபோது, தேர்தல்கள் நடைபெற்ற முறையை நாடு அறியாததா?

குடிசைப் பகுதி --- இரவோடு இரவாகப் போலீசார் நுழைவர் --- ஒன்று, இரண்டு, பத்து நூறு --- என்று பகுதிக்குப் பகுதி ஏழை எளியவர்களை வேட்டையாடி, கழகத்திற்கு உழைக்கும் உன்னையும் உன் தோழர்களையும் வேனில் ஏற்றிச் செல்வார்கள்!

சென்னையில் மட்டும் ஒரு தேர்தலுக்கு ஐயாயிரத்துக்குக் குறையாதவர்கள் சிறை பிடிக்கப்படுவார்களே!

அப்போதுதானே நண்பா -- நீ திடமனத்துடன் நின்று வெற்றிகளைத் திரட்டிக் கொடுத்தாய்!

இப்போதுதான் என்ன வந்துவிட்டது --- எதிர்பார்த்த சில இடங்கள் கிடைக்கவில்லை! அந்த இடங்களில் உன் இடமும் ஒன்று; கிடைத்த இடங்களில் நீதான் வெற்றி பெற்றிருக்கிறாய் என்பதை மறந்துவிடாதே!

உன் வெற்றிக்குக் குந்தகம் புரிந்தவர்கள் என்னதான் ஆயிரம் காரணங்களை அடுக்கிக் காட்டினாலும் --- உன்மீது கோடிகோடிப் பழிகளைச் சுமத்தினாலும் -- அவர்கள், கழகத்திற்குச் செய்த நேரிடையான -- அல்லது மறைமுகமான பாதகத்திற்குப் பதில் சொல்லித்தான் தீரவேண்டும்! நமக்கல்ல -- அவர்கள் மனச்சாட்சிக்கு!

கழகக் கண்மணியே! களையெடுக்கப்பட்ட கழனியில் கம்பீரமாக நிற்கும் உழவனைப்போல் நீ நிற்கிறாய்! நீ விளைத்த பயிர் வளர்ந்தோங்கும் காட்சியினைப் பார்த்தவாறு நிற்கிறாய்! நீ இறைத்த இரத்தம் வாய்க்கால வழியோடி --- இந்த இலட்சியப் பயிர் பூங்கதிர்விட்டுக் குலுங்கி நிற்கிறது! பூச்சிகள் விழாமல் மருந்து தெளிப்பதிலே இருந்து --- மாடுகள் மேயாமல் காவலிருப்பதிலே இருந்து --- எல்லாமே உன் வேலைதான்!

அந்த வேலைக்கு அச்சாணி -- மக்கள் பணி! உன் கழகம், ஏழை எளிய நடுத்தர மக்களின் இயக்கம்! செட்டி நாட்டரசர் உன்னைப் பார்த்துச் சிரித்து மகிழ்வார்; ஆனால் அவர், 'செக்' போகும் திக்கு, காங்கிரசு மாளிகைக்குத்தான்! அது உனக்குத் தேவையில்லாததுங்கூட!

உன் வட்டத்தைப் பொறுத்தவரையில், முயலும் -- ஆமையும் கதையாகவே நடந்துவிட்டது; அதனால், ஆமை முயலாகிவ்டுமா? --- ஆகாது! ஆகவே ஆகாது! முயலே! முன்போல சுறுசுறுப்பாக இரு! துடிப்போடு செயலாற்று! தொண்டுள்ளம் உன் சொத்து --- பண்புள்ளம் உன் செல்வம்! அதனை மறவாமல், உன் வழக்கமான கழகப் பணியை --- அனைவருடனும் கூடி --- ஒற்றுமையாக நிறைவேற்ற உறுதி எடுத்துக்கொள்!"

— மறவன் மடல்

வெற்றி ஊர்வலம்

"சென்னை 86-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், 2—11—68 மாலை 5-மணிக்கு வெற்றி ஊர்வலம் புறப்படும்" என்று துணைச்செயலாளர் சி. பா. இராமமூர்த்தி அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

திருமணம்

பழைய தருமபுரி தோழர் ஆர். பெருமாளுக்கும் தோழியர் காவேரியம்மாளுக்கும் 3—11—68 காலை 9-மணியளவில் பழைய தருமபுரி மணமகன் இல்லத்தில் வேளாண்மையமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி தலைமையிலும், உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் முன்னிலையிலும் திருமணம் நடைபெறும்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காரணத்தாலோ அவர் அதை விட்டுவிட்டார்.

எனவே யார் என்ன பேசிய போதிலும் தலைவர்களாக உள்ளவர்கள் இம்மாதிரி மாநகரங்களின் பிரச்சினைகளுக்கு அனைத்து இந்திய ரீதியில முயற்சி எடுக்க வேண்டும். மாநகராட்சி செயல்படுவதில் நடைமுறையில் உள்ள சட்டச் சிக்கல்களை ஆராய்ந்து திருத்த வேண்டும்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

2--11--68

தாரமங்கலம்

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு, தண்டிகேசுவரன் சாவடி மைதானத்தில், தலைவர்: டி. வி. பழனிச்சாமி, பேசுவோர்: உணவமைச்சர் கே. ஏ. மதியழகன், செ. கந்தப்பன் எம்.பி., கே. ஆர். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ.

3--11--68

பாட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு மந்தைத் திடலில்; தலைவர்: சி. கருப்பையா; பேசுவோர்: தா. கிருட்டினன் எம்.பி., ஆ. முனியாண்டி எம்.எல்.ஏ., சோணையா, கரிகாலன்.

வேலூர்

25-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு கோட்டை மைதானத்தில்; தலைவர்: பி. மோகனம்; பேசுவோர்: அமைச்சர் கே. ஏ. மதியழகன், கோ. விசுவநாதன் எம்.பி., தோப்பூர் திருவேங்கடம் எம்.ஏ., எஸ். முருகையன் எம்.எல்.ஏ., ஆர். என். அரங்கநாதன் எம்.எல்.ஏ., என். வீராசாமி எம்.எல்.ஏ., தெ. சமரசம், இறைமுடிமணி, வி. எஸ் பாண்டியன்.

காஞ்சிபுரம்

நகர தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு இரங்கசாமி குளம் அருகில்; பேசுவோர்: க. அறிவழகன் எம்.எல்.சி., வி. பி. அகிலன், என். கிருட்டினன் எம்.எல்.ஏ., இராசகோபால் எம்.எல்.ஏ., சி. எஸ். பூஞ்சோலை. சு. திருவேங்கடம் எம்.சி.

நெல்லை மாவட்ட தி.மு.க. குழுக் கூட்டம்

"நெல்லை மாவட்ட தி. மு. க. உறுப்பினர் கூட்டம், 3-11-68 காலை 10 மணிக்கு பாளையங்கோட்டை மகாராசா நகர் திருமண மண்டபத்தில் நடைபெறும்; அதுபோது பல பொருட்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். மாவட்டக் கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நகர மன்றத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்று மாவட்டச் செயலாளர் சு. இரத்தினவேல்பாண்டியன் அறிவிக்கிறார்.

வேளாண்மை அமைச்சர்

ஏ. கோவிந்தசாமி

சுற்றுப்பயணம்

நவ. 2: காலை 9-மணி: விக்கிரவாண்டி—விழுப்புரம் கல்வி மாவட்ட உடற்கல்விக் கழகமையப் போட்டி துவக்க விழா; 10-மணி: ஆசிரியர்கள் கூட்டணி துவக்க விழா; 10-30 மணி: பேரூராட்சி மன்ற அலுவலகத்தில் முதலமைச்சர் படத்திறப்பு; 11-30 மணி: பனப்பாக்கம்—ஆரம்பப் பள்ளித் திறப்பு விழா.

நவ. 3: காலை 8-30 மணிமுதல் 9-30 மணிவரை தருமபுரி ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; நிலமில்லா ஏழைகளுக்குப் 'பட்டா' வழங்குதலும், நில அடமான வங்கியின் கடன் பத்திரங்கள் வழங்குதலும்; 9-30 மணி: அகில இந்தியக் கூட்டுறவாளர் வாரத் துவக்க விழா; பிற்பகல் 3-30 மணி: ராஜாப்பேட்டை—ஊராட்சி ஒன்றியக் கால்நடை மருத்துவமனை; திறப்பு விழா; 5-30 மணி: அரூர்—நிலமில்லா ஏழைகளுக்குப் பட்டாவும், நில அடமான வங்கியின் கடன் பத்திரங்களும் வழங்குதல்.

குழுக் கூட்டங்கள்

செங்கற்பட்டு

"நகர தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டம், 3—11—68 காலை 10 மணிக்கு நகராட்சிப் பயணிகள் விடுதியில் நடைபெறும்" என்று செயலாளர் கோ. ஆலாலசுந்தரம் அறிவிக்கிறார்.

காரைக்கால்

"வட்ட தி. மு க. கூட்டம், 3—11—68 மாலை 5-மணிக்கு வழக்கறிஞர் எஸ். இராமசாமி இல்லத்தில் நடைபெறும்" என்று செயலாளர் அ. லூர்துசாமி அறிவிக்கிறார்.

கரூர்

"வட்ட தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம், 3—11—68 காலை 10 மணிக்கு வட்டக் கழகப் பணிமனையில் நடைபெறும்" என்று வட்டச் செயலாளர் ரெ. ந. இராமசாமி அறிவிக்கிறார்.

திருச்சி

"மாநிலத் தமிழாசிரியர் கழகப் பொதுக் குழுச் சிறப்புக் கூட்டம், 3—11—68 காலை 10-மணியளவில் திருச்சி இராசேந்திரா தனிப் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறும்" என்று துணைச்செயலாளர் த. மா. திருநாவுக்கரசு அறிவிக்கிறார்.

நெய்வேலி

"தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைக் கூட்டம், 3—11—68 காலை 9-மணிக்கு 24-வது வட்டம் மாந்தோப்பில் நடைபெறும்; அதுபோது காட்டூர் கோபால், வெ. கிருட்டினமூர்த்தி எம்.பி., எஸ். இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., எம். செல்வராசு, வெ. இராமநாதன் ஆகியோர் கலந்துகொள்வர்; உறுப்பினர்கள் உரிமைச் சீட்டுடன் கலந்துகொள்ள வேண்டுகிறேன்" என, செயலாளர் ஆண்டகுருநாதன் அறிவிக்கிறார்.

வேட்டைக்காரன்புதூர்

கோவை மாவட்டத் தையல் தொழிலாளர் மாநாட்டுப் பொருளாய்வுக் கூட்டம், 3—11—68 காலை 10-மணிக்கு வேட்டைக்காரன்புதூர் இராசராசேசுவரி திருமண மண்டபத்தில் நடைபெறும்; ஆங்காங்குள்ள தையற் தொழிலாளர் சங்கங்களில் பிரதிநிதிகள் வந்து கலந்துகொள்ளுமாறு அமைப்பாளர் சங்கரலிங்கம் கேட்டுக்கொள்கிறார்.

'இந்து' அலுவலக கதவடைப்பு நீங்கியது

சென்னை, நவ 1—

'இந்து' பத்திரிகை அலுவலகத்தில் கடந்த 71 நாட்களாகச் செய்யப்பட்டிருந்த கதவடைப்பு இன்று நீக்கப்பட்டுவிட்டது.

தகராறு குறித்து ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதால், தொழிலாளர் சங்கமும் இன்று காலையிலிருந்து வேலைநிறுத்தத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டுவிட்டது.

இது சம்பந்தமாக, சென்னையில் நேற்று பிற்பகலில் 'லேபர் கமிஷனர்' முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று.

பத்திரிகை நவம்பர் 2-ம் நாள் காலையிலிருந்து மீண்டும் வெளிவர ஆரம்பிக்கும்.

"நல்லுறவை மீண்டும் ஏற்படுத்திக்கொள்ள எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பதாக நிர்வாகத்தினரும், தொழிலாளர்களும் தம்மிடம் வாக்குறுதி அளித்துள்ளனர்" என்று லேபர் கமிஷனர் இராசேந்திரன், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

'இந்து' பத்திரிகைத் தகராறில் ஒப்பந்தத்தை ஏற்படுத்த அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, செ. மாதவன் ஆகியோர் தீவிர முயற்சி மேற்கொண்டு இருதரப்பினருடனும் பேச்சு வார்த்தை நடத்தினர். நேற்றைக்கு முன்னாள் மட்டும் இருதரப்பினருடனும் அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியனும் மு. கருணாநிதியும் நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடத்தினர்; அதுபோது இருதரப்பினரிடையேயும் உடன்பாடு ஏற்பட்டு ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று.